2012 ஏப்ரல் 19]

அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் மொடக்குறிச்சி தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்து, மேலும், கொடுமுடி போக்குவரத்து பணிமனைக்கு கையகப்படுத்தப்பட்ட இடத்திலே போக்குவரத்துப் பணிமனை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுமுடியில் போக்குவரத்துப் பணிமனை அமைப்பதற்கான நிலங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன. அதற்கு உண்டான திட்ட மதிப்பீடுகள் ஆய்வு செய்யப்பட்டு கருத்துரு அனுப்பக் கோரப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீடு வரப்பெற்ற பின் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 128, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

128—

நடமாடும் மருத்துவக் குழு

***1941—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, நான்கு வழிச் சாலை பகுதிகளில் நடமாடும் மருத்துவக் குழு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரை மாவட்டம், மேலூர் நான்கு வழிச் சாலையில் கருங்காலக்குடியில் 24 மணி நேரமும் செயல்படும் வட்டார ஆரம்ப சுகாதார நிலையமும் தெற்கு தெரு, கொட்டாம்பட்டி மற்றும் தும்பைப்பட்டி ஆகிய இடங்களில் 3 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களும் உள்ளன. மேலும், மேலூர் அரசு பொது

மருத்துவமனை 108 படுக்கைகளுடன் அறுவை சிகிச்சை அரங்கு மற்றும் போதுமான மருத்துவ வசதியுடன் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகின்றது. கொட்டாம்பட்டி காவல் நிலையம் மற்றும் மேலூர் அரசு மருத்துவமனையில் அரசு அறிமுகப்படுத்தியுள்ள 108 அவசர கால ஊர்தி 24 மணி நேரமும் விபத்து பயிற்சி பெற்ற முதலுதவிக் குழுவுடன் மருத்துவம் தொடர்பாக அவசர காலத் தேவைக்கு நிறுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் எந்நேரமும் இலவசமாகத் தொலைபேசியில் தொடர்புகொண்டு இந்தச் சேவையை பயன்படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு 108 அவசர கால ஊர்தி சேவையின் எண்ணிக்கையை அதிகரிக்கும்போது 4 வழிச் சாலை பகுதிகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மேலூர் தொகுதி என்பது முழுக்க முழுக்க 4 வழிச் சாலை நிரம்பிய தொகுதியாக இருக்கின்றது. ஏறத்தாழ 65 கி.மீ. நான்கு வழிச் சாலை என்னுடைய தொகுதியில் மட்டும் செல்கின்றன. தினந்தோறும் வெளியூரிலிருந்து வரும் வாகனங்கள் அடிக்கடி விபத்துக்குள்ளாகின்றன. அப்படி விபத்து நடக்கும்போது விபத்துக்குள்ளானவர்களின் உயிரைக் காப்பாற்ற அவசர சிகிச்சை பிரிவு உள்ள மதுரை அல்லது திருச்சி மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டிய நிலை உண்டாகிறது. அவ்வாறு கொண்டு செல்லும்போது அவர்கள் வழியிலேயே இறக்கின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நான்கு வழிச் சாலைப் பகுதிகளில் ஏற்படும் விபத்துகளின்போது அந்த உயிர்களைக் காப்பாற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன். மேலும் 2007—2011 ஆம் ஆண்டு வரை 1,452 விபத்துகள் நடந்து அதில் 455 பேர் உயிர் இழந்துள்ளனர், 1,064 பேர் காயம் அடைந்துள்ளனர். இப்படிப்பட்டவர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடுதலாக 108 அவசர கால வண்டிகளை அனுப்ப முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2012 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10—50

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 108 அவசர கால சேவை வாகனங்களின் எண்ணிக்கையை 200 ஆக அதிகப்படுத்த இருக்கிறார்கள். அந்தச் சமயத்திலே இந்த நான்கு வழிச்சாலைப் பகுதிகளுக்கு உரிய முக்கியத்துவம் கண்டிப்பாக அளிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கடந்த 2001—2006 புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி இருந்தபோது, இதே கோரிக்கையை நான் வலியுறுத்தியபோது, தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலை ஓரங்களில் நடக்கின்ற விபத்துகளில் விபத்துக்குள்ளானவர்களின் உயிர்களைக் காப்பாற்றுவதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஐந்து இடங்களைத் தேர்ந்தெடுத்து, அதில் எங்கள் மேலூர் பகுதிக்கும் ஒன்றரை கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, ஒரு அவசர சிகிச்சைப் பிரிவை மேலூரிலே அறிவித்து, அதற்கான கட்டடம் கட்டி, அதற்குத் தேவையான தளவாடச் சாமான்களெல்லாம் வழங்கப்பட்டன.*

அதற்குப் பிறகு ஆட்சி மாற்றம் வந்த பிறகு, ஆட்சி மாறிய உடனே என்ன நடக்கும் என்பது உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். அதை அண்ணன் திறப்பதா இல்லை தம்பி திறப்பதா என்ற போரிலே அந்த அவசர சிகிச்சைப் பிரிவு திறக்கப்படாமலே இருந்தது. புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி மீண்டும் மூன்றாவது முறையாக அமைந்திருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு இப்பிரச்சினையை எடுத்துச் சென்று, ஒன்றரைக் கோடி ரூபாயில் நவீன வசதிகளுடன் உயிர் காப்பதற்காக மேலூரில் கட்டப்பட்டிருக்கின்ற அந்த மருத்துவமனையைத் திறக்கவும், அதற்குத் தேவையான டாக்டர்களை நியமனம் செய்யவும் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2012 ஏப்ரல் 19

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்த அவசர சிகிச்சைப் பிரிவை உடனடியாகத் திறக்க ஏற்பாடு செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 129, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

129—

சொந்தக் கட்டடம்

***1163—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடியில் உள்ள பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வாடகைக் கட்டடங்களில் செயல்படும் அனைத்து விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்ட ஆணையிட்டுள்ளார்கள்.

தற்போது தனியார் கட்டடங்களில் இயங்கும் 148 விடுதிகள் அனைத்திற்கும் 115.12 கோடி ரூபாய் செலவில் சொந்தக் கட்டடம்